**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.35/2015**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அங்கய்யா | மதம் | : இந்து |
| த/பெ | : ரங்கய்யா | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : ராமலிங்காபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**17.10.2025**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

9. வழக்கு சொத்திற்கு அ பதிவேடு, SLR நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா, என் தாத்தா அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் 1993ல் என் அப்பா பெயரில் வந்த பட்டா தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா, தாத்தா அனுபவித்ததாக சொல்வதில் எந்த வகையில் அனுபவித்து வந்தார்கள் என்பதை எனது வழக்கிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் நான் அவ்வாறு எந்த விவரமும் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் பழைய புல எண் 78/1 என்றால் பழைய புல எண்.78/1பா புதிய புல எண்.293/15 ஆகும்.

10. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலம் பத்தி 3ல் பழைய புல எண்.78/1 என சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3ல் பழைய புல எண்.78/1 என உள்ளது என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் புல எண்.78/1பா என்று இல்லை என்றாலும் புல எண்.78/1 என்றுதான் உள்ளது என்றாலும் (**சாட்சியிடம் பிரமாண வாக்குமூலம் படிக்க கொடுக்கப்பட்டது**) பா அடித்து நீக்கப்பட்டுள்ளது. 2015ல் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது பிராது சொத்து

விவரத்தில் புல எண்.78/1பா என சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எனது பிராதில் புல எண்.78/1 என்று இல்லை என்றால் **(சாட்சியிடம் அசல் பிராது படிக்க கொடுக்கப்பட்டது)** சரிதான்.

11. பழைய புல எண்.78/1 தான் புதிய புல எண்.293/15 ஆக உள்ளது என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.293/15க்கு பட்டா கொடுத்துள்ளேன். அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். அதில் இரண்டு புல எண்கள் காட்டப்பட்டுள்ளது. பழைய புல எண்.78/1 தான் புதிய புல எண்.293/15 ஆக உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புல எண்.78/9ல் கிழக்கு மேற்கு 100 அடி தென்வடல் 18 1/2 அடியை சல்ல முனுசாமியிடம் இருந்து 1996ல் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

12. பி.வா.சா.ஆ 2ன் படி சல்ல முனுசாமியிடம் இருந்து பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் **(சாட்சியிடம் பி.வா.சா.ஆ 2 படிக்க கொடுக்கப்பட்டது)** இது ஆவணமே இல்லை. அசல் பி.வா.சா.ஆ 2 ஆவணம் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.32/2012 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னிடம் அசல் ஆவணமே காட்டவில்லை. என்னிடம் காட்டப்படுவதுதான் பிரதிவாதி கிரையம் வாங்கிய ஆவணத்தின் முன் ஆவணம் என்றால் **(சாட்சியிடம் பி.வா.சா.ஆ 1 படிக்க கொடுக்கப்பட்டது)** இந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. அசல் பி.வா.சா.ஆ 1 ஆவணம் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.32/2012 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னிடம் அசல் ஆவணமே காட்டவில்லை. பி.வா.சா.ஆ 1, 2 ஆவணங்களின் அசல் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.32/2012 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் வேண்டுமென்றே தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. 1985ல் நான் ராமலிங்காபுரத்தில்தான் இருந்தேன் என்றால் சரிதான். 1985ல் சின்ன நாகய்யாவிடம் இருந்து சல்ல முனுசாமி கிரையம் வாங்கி 1996ல் பிரதிவாதி கிரையம் பெற்று சொத்தை அனுபவித்து வருகிற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனக்கு தெரியாது. அ.வ.எண்.32/2012ல் என்னை குறுக்கு விசாரணை செய்யும்போது 1996ல் இருந்து வாதி ஆஞ்சிநேயன் அனுபவிப்பது தெரியும் என நான் சாட்சியம்

அளித்துள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை. மாற்றி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படுவதுதான் அ.வ.எண்.32/2012 வழக்கில் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் மற்றும் எனது குறுக்கு விசாரணை வாக்குமூலம் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் அ.வ.எண்.32/2012 வழக்கின் பி.வா.சா.ஆ 1ன் சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அ.வ.எண்.32/2012 வழக்கில் 1996ல் இருந்து ஆஞ்சிநேயன் சொத்தில் அனுபவத்தில் இருப்பதை தெரியும் என ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த ஆவணங்களிலும் புல எண்.78/9 என் சொத்திற்கு வடக்கே இல்லை.

14. நில அளவையர், நீதிமன்ற ஆணையர் வந்து வழக்கு சொத்தை அளவீடு செய்தார்கள் என்றால் ஆமாம். 13.01.2014ல் அளந்தார்கள். நில அளவையர், நீதிமன்ற ஆணையர் வந்து வழக்கு சொத்தை அளவீடு செய்த போது என் சொத்திற்கு வடக்கே ஆஞ்சிநேயர் சிமெண்ட் கூரை அமைத்து சிமெண்ட் கற்களால் ஆன கட்டுமானம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அளக்கும்போது சிமெண்ட் சீட்டு போட்ட மாட்டு கொட்டகை இருந்தது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை வரைபடத்தில் மாட்டு கொட்டம் என குறிப்பிடப்படவில்லை என்றாலும் வீடு என்றுதான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் **(சாட்சியிடம் நீதிமன்ற ஆணையர் அறிக்கை படிக்க கொடுக்கப்பட்டது)** சரிதான். ஆனால் என்னிடம் மாட்டு கொட்டகை என்றுதான் காண்பித்தார்கள்.

15. 1996ல் இருந்தே ஆஞ்சிநேயர் கிரையம் பெற்ற தேதியில் இருந்து ஆஞ்சிநேயர்தான் அனுபவித்து வருகிறார் என்றாலும் அந்த விவரம் தெரிந்தே நான் 2015ல்தான் இந்த வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் வழக்கு காலவறையரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் என் சொத்தை சுற்றி சுற்றுச்சுவர் கட்டியுள்ளேனா என்றால் 2 அடி உயரத்திற்கு சுற்றுச்சுவர் சின்னதாக கட்டியுள்ளேன். அந்த சுற்றுச்சுவரில் இருந்து 3 அடி காலியிடம் உள்ளது என்றாலும் அந்த 3 அடி தள்ளிதான் அந்த சிமெண்ட் சீட்டு வீடை ஆஞ்சிநேயர் கட்டியுள்ளார் என்றால் 1/2 அடிதான் உள்ளது. எனக்கு 3 அடி வரவேண்டும். ஆஞ்சிநேயர் வீட்டிற்கும் எனது சுற்றுச்சுவருக்கும் இடையே எத்தனை அடி காலியிடம் உள்ளது என்றால் 1/2 அடி உள்ளது. எனக்கு 3 அடி வேண்டும்.

16. எனக்கு 3 அடி இருப்பதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும்

உண்மையிலேயே எனக்கு 3 அடி காலியிடம் இருந்திருந்தால் அந்த 3 அடிக்கு அடுத்துதான் நான் சுற்றுச்சுவர் அமைத்திருப்பேன் என்றால் எனக்கு 3 அடி உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனக்கு அவ்வாறு 3 அடி காலியிடம் இல்லை என்றாலும் சரியல்ல. ஆஞ்சிநேயர் சிமெண்ட் கற்களால் சிமெண்ட் சீட்டு அமைத்து கட்டியுள்ள கட்டிடத்திற்கு ரூ.1 லட்சம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. அது வீடு இல்லை மாட்டு கொட்டம். நான் இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது மனைக்கு மட்டும்தான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றாலும் ஆஞ்சிநேயர் கட்டியுள்ள சிமெண்ட் சீட்டு வீட்டிற்கு நீதிமன்ற கட்டணம் கட்டவில்லை என்றாலும் எனக்கு அது என்ன மதிப்பு போகும் என்று தெரியாது. எனக்கு அந்த வீட்டின் மதிப்பு நன்றாக தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

17. நீதிமன்ற ஆணையர் அறிக்கை வரைபடம் தாக்கல் செய்த பின்பு நான் பிராது சொத்து விவரத்தை மட்டும் திருத்தம் செய்துள்ளேன் என்றாலும் நீதிமன்ற கட்டணத்தை திருத்தம் செய்யவில்லை என்றாலும் எனக்கு தெரியாது. சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் புல எண்.78/9 என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில்தான் புல எண்.78/9 என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் புல எண்.78/9 பொய்யான புல எண்ணாகும். புல எண்.78/1தான் உண்மையான புல எண் ஆகும். புல எண்.78/9 பொய்யானது என்றிருந்தால் அதை எனது பிராதிலேயே நான் சொல்லியிருக்க வேண்டும் என்றாலும் தற்போது எனது பிரமாண வாக்குமூலத்தில் அதை சொல்ல முடியாது என்றாலும் சரியல்ல.

18. என் தாத்தா பெயர் என்ன என்றால் அங்கய்யா ஆகும். சொத்து என் தாத்தாவிற்கு சொந்தம் என்று சொல்லியிருப்பதில் என் தாத்தாவின் இறப்பு சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பெற்றோரின் இறப்பு சான்று, வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தாவிற்கு என் அப்பா மட்டும்தான் வாரிசு என்பதை காட்ட வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் 08.05.2007ல் கிழமேல் 32 அடி தென்வடல் 16 அடி மனையை ஆஞ்சிநேயர் கேசவலு என்பவருக்கு விற்பனை

செய்துள்ளதாக சொல்லியிருப்பதில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அந்த ஆவணத்தை பார்க்கவில்லை. வில்லங்க சான்றில் அது வந்தது.

19. எனது கூடுதல் பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் **"பிரதிவாதி ஆஞ்சிநேயன் தான் வாங்கிய சொத்தை கேசவலு என்பவருக்கு 08.05.2007ல் கிழக்கு மேற்கு 32 அடிகள் வடக்கு தெற்கு 18 அடிகள் கொண்ட மனையை சர்வே எண்.78/9 பத்திர எண்.5315/2007ன் படி விற்பனை செய்துள்ளார்"** என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நான் சொல்வது போல் ஆஞ்சிநேயர் எந்த சொத்தையும் கிரையம் கொடுக்கவில்லை என்றாலும் உண்மையிலேயே கிரையம் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தின் நகல் பெற்று தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவர்கள் பத்திரம் என்னிடம் இல்லை. நான் வழக்கிற்காக வேண்டி எனது பிராதில் இல்லாத விவரங்களை கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)